<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**</u>

அசல் வழக்கு எண். 49/2024 நாள்– 21.01.2026

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சு.தனபாக்கியம், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– சதீஷ்குமார்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 1ம் வாதியின் ஆதார் அட்டை – நகல் – **வா.சா.ஆ.1 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

2) 2ம் வாதியின் ஆதார் அட்டை – நகல் – **வா.சா.ஆ.2 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

3) 1ம் வாதியின் மாற்று சான்றிதழ் – அசல் – **வா.சா.ஆ.3**

4) 26.02.2018 ம் தேதியிட்ட 1ம் வாதியின் திருமண பத்திரிக்கை – அசல் – **வா.சா.ஆ.4**

5) 17.05.2024 ம் தேதியிட்ட வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் – **வா.சா.ஆ.5.**

6) 20.05.2024 ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் – **வா.சா.ஆ.6.**

7) 05.06.2024 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு – அசல் – **வா.சா.ஆ.7.**

8) 10.06.2024 ம் தேதியிட்ட 3 ம் பிரதிவாதி அனுப்பிய விசாரணை அறிவிப்பு – அசல் – **வா.சா.ஆ.8.**

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**